முற்பகல் 11–45

3. கவன ஈர்ப்பு

மேட்டுப்பாளையம் நகராட்சி, சாமண்ணா நகரிலுள்ள நீர் உந்து நிலையத்தை விளாமரத்தூர் பகுதிக்கு மாற்றுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ் அவர்கள்.*

*__திரு. A.K. செல்வராஜ்:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் நகராட்சி, சாமண்ணா நகரிலிருந்து நீருந்து நிலையத்தை விளாமரத்தூர் பகுதிக்கு மாற்ற வேண்டியது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

*__மாண்புமிகு திரு. கே.என். நேரு:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுகுறித்த விவர அறிக்கை ஒன்று மாண்புமிகு உறுப்பினர்களின் மேசைகளின் மேலுள்ள சிறு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அறிக்கை

மேட்டுப்பாளையத்திலிருந்து சுமார் 10 கி.மீ. தொலைவில் உள்ள விளாமரத்தூர் என்ற கிராமத்தில் இருந்து தூய்மையான குடிநீர் எடுத்து, அக்குடிநீரைக் குழாய்கள்மூலம் சாமண்ணா நகர் கொண்டு வந்து, தலைமை நீரேற்று நிலையத்தில் சுத்திகரிப்பு செய்து நகரில் மேல்நிலைத் தொட்டிகளில் நிரப்பி, குடிநீர் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த மேட்டுப்பாளையம் நகர்மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நீருந்து நிலையத்தை சாமண்ணா நகர் பகுதியிலிருந்து நெல்லித்துறை விளாமரத்தூர் பகுதிக்கு மாற்றும் திட்டம் ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ் அவர்கள்.*

திரு. A.K. செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதிலே விளாமரத்தூரிலிருந்து குழாய்கள் பதித்து, ஏற்கெனவே இருக்கின்ற சாமண்ணா நகர் நீருந்து நிலையத்திற்கு நீர் கொண்டுவருவதாக சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நகர்மன்றத்தின் மூலமாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இது மிக முக்கியமான பிரச்சினை. தற்போது நீர் எடுக்கும் நிலையம் பவானி ஆற்றிலே சாமண்ணா நகரிலே இருக்கிறது. நீர் எடுக்கும் நிலையம் இருக்கின்ற பகுதிக்கு மேலே, இரண்டு ஆலைகளினுடைய கழிவுநீர் பவானி ஆற்றிலே கலக்கிறது. இன்னொன்று, குன்னூரிலிருந்து வருகிற கல்லாற்றினுடைய கழிவுநீரும் வந்து, பவானி ஆற்றிலே நீருந்து நிலையத்திற்கு மேலே கலப்பதால், அந்த நீருந்து நிலையத்தின் நீர் எடுக்கின்ற இடம் மாசுபட்டு, மக்கள் பயன்படுத்துகின்ற குடிநீர் மாசுள்ள குடிநீராக இருக்கின்ற காரணத்தினால், மக்கள் இதற்காக பல போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். அதேபோல, தென்மண்டல தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் வழக்குகள் தொடுத்து. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்ன வேண்டுமென்று கேளுங்கள்.*

திரு. A.K. செல்வராஜ்: *வழக்கில் தீர்ப்பு வந்திருக்கிறது. 28–3–2022–ல் பசுமை தீர்ப்பாயத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பு விளாமரத்தூரிலிருந்து. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்கிறீர்களா? என்ன வேண்டுமென்று கேளுங்கள்.*

திரு. A.K. செல்வராஜ்: *ஒரே ஒரு நிமிடம். விளாமரத்தூரிலிருந்து குடிநீரை எடுத்துக்கொள்ளலாம். அதற்கு நகராட்சி நிர்வாகம் உரிய தீர்மானத்தை நிறைவேற்றி அரசுக்குக் கருத்துரு அனுப்பி, உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதுசம்பந்தமாக ஏற்கெனவே, இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபொழுது, தேர்தல் சமயத்திலே*

2022 மே 6] [திரு. A.K. செல்வராஜ்]

மேட்டுப்பாளையத்தில் பரப்புரையாற்றுகிறபொழுது, 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் கண்டிப்பாக மேட்டுப்பாளையம் நகர மக்களுக்கு விளாமரத்தூரிலிருந்து நல்ல பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும்' என்று உத்தரவாதத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி. இன்னொரு கேள்வி இருக்கிறது. இதற்கு பதில் சொல்லிவிடட்டும். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லட்டும்.*

திரு. A.K. செல்வராஜ்: *ஒரே ஒரு நிமிடம். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில், நீர் எடுக்கும் நிலையத்தை விளாமரத்தூரில் அமைக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறேன். ஆனால், அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கிருந்து தண்ணீர் கொண்டு வரப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இரண்டும் ஒன்றுதான். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அதை நிறைவேற்றித் தருவாரா என்பதைக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் நகராட்சி என்பது கோவை மாவட்டத்தைச் சேர்ந்த தேர்வுநிலை நகராட்சியாகும். மேட்டுப்பாளையம், கோயம்புத்தூரிலிருந்து 136 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. 1942 ஆம் ஆண்டில் மூன்றாம் நிலை நகராட்சியாகவும், 1978 ஆம் ஆண்டில் 28 வார்டுகளை உள்ளடக்கிய முதல்நிலை நகராட்சியாகவும் இருந்தது. பின்னர், 1998 ஆம் ஆண்டு அரசாணை எண் 85-ன்படி தேர்வுநிலை நகராட்சியாக தகுதி பெற்றுள்ளது. 7.20 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள இந்த நகராட்சி 33 வார்டுகளோடு ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 9,235 நபர்கள் என்ற அளவில் இருக்கிறது. இந்த நகராட்சியின் மக்கள் தொகை 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 69,213 ஆகும். இதனுடைய விவரம் ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. 1948 ஆம் ஆண்டு அங்கு ஒரு கிணறு வெட்டப்பட்டிருக்கிறது; 1978 ஆம் ஆண்டில் ஒரு கிணறு வெட்டப்பட்டிருக்கிறது; 2001 ஆம் ஆண்டில் ஒரு கிணறு வெட்டப்பட்டிருக்கிறது. இந்த 3 கிணறுகளிலிருந்து நீர் எடுத்து, அங்கிருக்கின்ற நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்குத் தரப்பட்டு, அந்த சுத்திகரிப்பு நிலையம் மூலமாகத்தான் தண்ணீர்*

தரப்பட்டுக் கொண்டிருக்கிறது. இப்போது நீங்கள் சொல்வதுபோல, ஆலைகள் அங்கிருக்கின்ற காரணத்தால், கழிவுநீர் அங்கு கலக்கின்ற காரணத்தால், 'தண்ணீர் சுத்தமாக இல்லை' என்று நகராட்சியின் மூலமாக ஒரு தீர்மானம் தரப்பட்டிருக்கிறது. விளாமரத்தூரிலிருந்து புதியதாக குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, அந்தத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. விளாமரத்தூரில் புதியதாக ஒரு கிணறு வெட்டப்பட்டு, அந்தக் கிணற்று நீரை இங்கிருக்கின்ற சுத்திகரிப்பு நிலையங்களுக்குக் கொண்டு வந்து, அதன்மூலமாக சுத்தமான நீரைத் தர வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, தென்மண்டல தேசிய பசுமை தீர்ப்பாயத்திலும் அதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது ரூ.20 கோடி நிதியை ஒதுக்கி, உடனடியாக இப்பணிகளைச் செய்ய உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, வேலை முடிந்து, விரைவில் நல்ல நீர் உங்களுக்கு வழங்கப்படும்.

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், தேர்தல் வாக்குறுதியாக இருந்தாலும், நிதி ஒதுக்கி அப்பணிகள் நிறைவேறப் போகின்றன. எனவே, நன்றி சொல்லி, அமருங்கள்.*

திரு. A.K. செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகின்றபோது, அடுத்த 30 ஆண்டுகளின் மக்கள்தொகையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, அதனைக் கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டும். அப்போதுதான் தண்ணீர் பிரச்சினையை. . .* (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், புதிதாக உருவாக்கப்படும் திட்டங்கள் எல்லாமே அதே அடிப்படையில்தான் உள்ளன.*

திரு. A.K. செல்வராஜ்: *அதனை விரைவில் நிறைவேற்ற வேண்டும். இன்னொன்று, பவானி ஆற்றில் இரண்டு கதவணைகள், தமிழ்நாடு மின்சார வாரியத்தின்மூலம் மின்சாரம் எடுப்பதற்காகக் கட்டப்பட்டிருக்கின்றன. ஒரு வினாடிக்கு 3,000 கன அடி தண்ணீர் வந்தால்தான் மின்சாரம் எடுக்க முடியும்.* (குறுக்கீடு) *ஒரு நிமிடம்.*

2022 மே 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், அது வேறு department. குடிநீருக்கும் அதற்கும் சம்பந்தமில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் போதும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்குப் பதில் சொல்வார்கள். (குறுக்கீடு) இதற்கு சம்பந்தமான கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள், மின்சாரம் எடுப்பது வேறு. (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அங்கிருந்து மின்சாரம் எடுப்பது பற்றி சொல்கிறீர்கள். இப்போது நான் சொல்கிறேன். தண்ணீர் தருவதாக சொன்னதற்கு நன்றி சொல்லி உட்காருங்கள். நான் அடுத்த subject–க்குப் போக வேண்டும்.

திரு. A.K. செல்வராஜ்: இல்லை. இரண்டும் ஒன்றுதான். குடி தண்ணீர்தான். (குறுக்கீடு) இது சம்பந்தமாகத்தான் கேட்கிறேன். சம்பந்தமில்லாமல் நான் பேச மாட்டேன். ஒரே ஒரு நிமிடம். (குறுக்கீடு) அதாவது, பவானி ஆற்றில் இரண்டு கதவணைகள் கட்டப்பட்டிருப்பதால் தண்ணீர் தேக்கப்படுகிறது. இந்த பவானி ஆற்றில் மேலும் 16 குடிதண்ணீர்த் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. கதவணையில் தண்ணீர் தேக்கப்படுவதால், தண்ணீர் மாசடைந்து கீழே வரும்போது, அந்தக் குடிநீரும் மாசடைவதால், மக்கள் அந்த நீரையும் நல்ல தண்ணீராகத் தர வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். ஆகவே, ஆற்றில் ஆண்டுதோறும், நாள்தோறும் தண்ணீர் வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், தண்ணீர் வழங்கும்போது அதனை சுத்திகரித்துதான் வழங்குவார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், போதும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு)

திரு. A.K. செல்வராஜ்: நல்ல சுத்தமான குடிநீர் வழங்க வாய்ப்பு இருக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடம் கலந்து பேசி, இதன்மீது நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரம் எடுப்பதற்காக காவேரி ஆற்றில் barrages அமைக்கப்பட்டிருக்கின்றன. அப்படி காவேரி ஆற்றில் barrages அமைக்கப்பட்ட காரணத்தினால்தான், மேட்டூரிலிருந்து கிட்டத்தட்ட 100 கிலோ மீட்டர் தொலைவிற்கு இருபக்கமும் நிலத்தடி நீர் பெருகி, விவசாயம் அதிகளவில் செய்ய முடிகிறது. ஒன்று விவசாயமும் நன்றாக இருக்கிறது. இரண்டு, மின்சாரம் எடுக்கும் நிலையமும் இருக்கிறது. இதனை உடனடியாகத் தீர்வு செய்ய இயலாது. ஏற்கெனவே கட்டப்பட்ட barrages–ல் தண்ணீர் தேக்கி வைத்தால்தான், மின்சாரம் எடுக்க முடியும். அதைத் தேக்காமல் விட்டால், மின்சாரம் எடுக்க இயலாது. அப்படியே அந்த நீர் ஓடினால் நல்ல நீர் வரும் என்று சொல்கிறீர்கள். மேலும், நல்ல நீராக வருவதற்கு சுத்திகரிப்பு நிலையத்தை மேலும் விரிவுபடுத்தி, நல்ல நீர் தருவதற்குரிய முயற்சிகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, பொதுக் கணக்குக் குழுவினுடைய தலைவர் அவர்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021–2022 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 23 முதல் 28 வரையிலான 6 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு திரு. ஆ. கிருஷ்ணசாமி, பொது நிறுவனங்கள் குழுவின் உறுப்பினர் அவர்கள்.

திரு. ஆ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021–2022 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 14 முதல் 19 வரையிலான 6 அறிக்கைகளை பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.